ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2266/72 - 2022 පෙබරවාරි මස 11 වැනි සිකුරාදා - 2022.02.11

*2266/72 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2 ஆவது திருத்தம்**

இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு

*பின்வரும் பகுதி I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்ட 2020, ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதிய மற்றும் 2199/ 10 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் சேவைப் பிரமாணக்குறிப்பு பின்வரும் பகுதி II இல் காட்டப்பட்டுள்ளவாறு மீளவும் திருத்தியமைக்கப்படுகின்றது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களும் நிபந்தனைகளும் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.*

*அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,*

**எம். ஏ. பீ. தயா செனரத்,**
செயலாளர்,
*அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.*

*2022, பெப்புருவரி 10.*

1A - G 36056 — 12 (2022/02)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**பகுதி** I

*திருத்த இலக்கம் 01 - 2021, ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதிய மற்றும் 2248/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*

**பகுதி** II

*14. ஆயுர்வேத மருத்துவ சேவைக்கு உள்ளீர்த்தல் என்பதன் கீழ் ii இன் (உ) ஆக பின்வரும் பிரிவு உள்ளடக்கப்படுகிறது.*

*(உ) விசேட தரத்தில் 03 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் நிருவாகம் தரம் I இற்கும், விசேட தரத்தில் 03 வருடங்களுக்குக் குறைவான காலம் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் நிருவாகம் தரம் II இற்கும் உள்ளீர்க்கப்படுவர்.*

*15. இடைக்கால ஏற்பாடுகளின் கீழ் பின்வரும் பிரிவு உள்ளடக்கப்படுகிறது :*

*15.3 புதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் ஆயுர்வேத மருத்துவ நிருவாகத் தரங்களுக்கு உத்தியோகத்தர்களை உள்ளீர்ப்பு செய்யும் வரை முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்புக்கு அமைவாக ஆயுர்வேத மருத்துவ விசேட தரத்திற்குப் பதவியுயர்த்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் பின்னிணைப்பு V இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆயுர்வேத மருத்துவ நிருவாகத் தரங்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவிகளுக்கு நியமிப்பதற்குத் தகைமை பெற்றுள்ள உத்தியோகத்தர்களாகக் கருதப்படுவர். மேலும், புதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் ஆயுர்வேத மருத்துவ நிருவாகத் தரத்தின் சேவைக் காலத்தைக் கணக்கிடுகையில் முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்புக்கு அமைவாக விசேட தரத்தில் சேவையாற்றிய காலமும் உள்ளடங்கலாகக் கணக்கிடப்படும்.*

EOG 02-0459

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*